நூலகம்

இலக்கியம்

புத்தகச் செய்தி நவம்பர், 1995 மாத இதழ்

நூலகம் : 1 ஆசிரியர் : நூலகஞானி இலக்கியம் : 3

திருக்குறள் நூலகம் திருக்குறள் பாஸ்கரன்

வாசகர் சேவை காட்சிகள்



புதிய வரவு

பயனுள்ள நல்ல புத்தகங்களை படியுங்கள் பரிசளியுங்கள் பயனுள்ள நல்ல தலைமுறையை எதிர்காலத்தில் உருவாக்குங்கள் எனக்கூறும்:

நர்மதா பதிப்பகம்

நல்ல நூல் வெளியீட்டாளர்கள்
16/7, ராஜாபாதர் தெரு, பாண்டிபஜார்,
தியாகாரய நகர், சென்னை—600 017.
போன் 828 04 66

புதிய வெளியீடுகள்



எட்டுத் திக்கிலிருந்து ஏழு கதைகள் G திலகவதி IPS செப்டம்பர் 1995, பக்கம் 320 ரூ. 55.

G. திலகவதி I.P.S
(நூலாசிரியர்)
I.G.P.

தரமான இலக்கியத்துக் கானதாகத்தை வாசகர்மனதில் தூண்டும் பசியூக்கியாகும் இந்நூல். ஏழு ஆசிரியர்களின் பிற படைப்புகளையும் பிற சிறந்த படைப்பாளிகளின் ஆக்கங்களையும் அறிமுகப் படுத்திக் கொள்ளவுமான ஆர்வத்தை, இந்நூல் படிப் போரின் இதயங்களில் ஏற்படுத் தும் வல்லமையுடையது.

நோபல் பரிசுபெற்ற ஏழு படைப்பாளிகளின் மற்றும் அவர்களுடைய கதைகள் ஏழு, கதைகளின் தமிழாக்கமும் கட்டுரை ஆக்கமும் G.ம் திலகவதி I P S

1901இல் முதன் முதலாக நோபல் பரிசு வழங்கப்பட்டது, நோபலின் (1833 - 1896) வாழ்க்கை ரசமானது நோபல் பரிசு பெற்ற படைப்பாளர் களின் வாழ்க்கை விவரங்கள் இன்னும் ரசமானவை.

83 இலக்கிய நோபல் பரிசு கள் (1990) வழங்கப்பட்டுள்ளன இதில் பெண்கள் எட்டுபேர் மட்டுமே. 1947-91இடைப்பட்ட காலகட்டத்தில் இலக்கிய நோபல் பரிசு பெற்றவர்கள் பட்டியலான இருபதில், இந்நூல் ஏழு படைப்பாளி களின் படைப்புகளை மட்டுமே பேசுகிறது.

இத்தொகுதியில் ஒரேபெண் எழுத்தாளர் பேசப்படுகிறார். வார்த்தைகளின் கனம் பார்த்து எழுதும் படைப்பாளி களும் ரசிக்கும் வாசகர்களும் தமிழிலும் பெருகவேண்டும்.



கொங்கு நாட்டு திருத்தலங் கள் ஏழு சேலம். ப. அன்பரசு ஆகஸ்டு 1995 பக் 152 ரூ. 27/-

கொங்கு நாட்டுத் திருத் தலங்கள் ஏழும். கெடில நதிக் கரையோர திருக்கோயில்கள் மூன்றும், கர்நாடக மாநிலக் கோயில்கள் மூன்றும்— சிவ வைணவத தலங்களைப் பற்றிக் கூறும் இத்நூல் கல்வெட்டு ஆராய்ச்சியாளர்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும், சமயச் சான்றோர்களுக்கும் பெரிதும் பயன் தரும் ஸ்தல புராண அம்சங்களும் கூடிய பக்தி இலக்கிய நூல்.

நர்மதா வெளியீட்டின் பதிப்புச் சிறப்பம்சங்கள்

இந்நூலிலும் உள்ளன. முன் அட்டைப்படம் திருச்செங்கோடு மாதொருபாகர் ஆலயத்தின் சிங்கமுகத்தூண்கள்.



இருவருக்குப் போதும். அசோக மித்திரன் ஜூன், 1995, பக். 208. ரூ.37/-

40 ஆண்டுகளாக தொடர்ந்து எழுதி வருபவர் அசோகமித்திரன்.

இத்தொகுப்பில் உள்ள கதைகள் சமீபத்தியவை.

இத்தொகுப்பிலுள்ள பல கதைகளில் களமும் பாத்திரங்களும், ஆசிரியரின் வாழ்க்கையோடு அடையாளம் கண்டு கொள்ளக் கூடியவை.

சுய சரிதங்கள் பெருமளவு கற்பனைதானோ?

கதைகள் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டு ஒரு நீண்ட கதையின் பிரிவுகளாகத் தோன்றுகின்றன.

எப்படி மாற்றிப் படித்தாலும் அந்த பெரிய கதையைப் பூர்த்தி செய்யத்துணை போலவதாகத்தான் தோன்றுகிறது.



சீதைகளைக் காதலியுங்கள்

ஜோதிர்லதா கிரிஜா

மே, 1995. பக். 368. ரூ 60/-

சிறந்த சிறுகதைகளை உள்ளடக்கியிருக்கும் இத்தொகுப்பு தமிழ் ஆர்வலர்களால் பெரிதும் வரவேற்கப்படும் பாராட்டப்படும்,

இவை தமிழ் சஞ்சிகைகளில் (பருவ ஏடுகளில்) வெளிவந்தவை.

ஆசிரியர் பெண்ணுரிமைக்குக் குரல் கொடுப்பவர்.

படிப்பவர்களின் சிந்தனையைக் கிளர்த்துகிற முறையில் கதைகளில் பிரச்சினைகள் கையாளப் பட்டுள்ளன. சாதனைதான்.

இவர் சிறுவர் இலக்கிய செல்வியும் கூட.

ஒரு காதலின் ரகசியம்

இ. எஸ். தேவசிகாமணி

ஜனவரி 1995. பக். 115 ரூ. 16/-

தமிழக முன்னேற்றத்திற்கு தம் உலகப்பயண அனுபவங்களை பயன்படுத்துவதோடு மட்டுமில்லாமல், தமிழ் படைப்பாளிகளை ஊக்குவிக்க ஆண்டு தோறும் பெரும் பரிசுகளையும் பாராட்டுகளையும் வழங்கி வருபர் ஆசிரியர். அஞ்சல்துறை ஊழியர்களின் ஏகோபித்த தலைவர். இந்நூல் இவரது ஆறாவது கதைத் தொகுப்பாகும்.



நிழல் யுத்தம்

D. செல்வராஜ்,

ஜுன், 1995, பக் 244. ரூ 42/-

இது ஆசிரியரின் மூன்றாவது கதைத் தொகுப்பு,

கொள்கை, நெறி ஆகியவற்றை கடைப்பிடித்து அவற்றின் அடிப்படையினின்று எழுதப்பட்டவை இக்கதைகள். நூல் ஆசிரியர் செல்வராஜிக்கும் பதிப்பாளர் - பண்பாளர் ராமலிங்கம் இருவருக்குமே பாராட்டுகள்.

இல்லாரும் இல்லை உடையாரும் இல்லை என்ற சமூக அமைப்புக்காக உக்கிரமாகப்

போராடும் கதாபாத்திரங்கள் நிறைந்த கதைகளடங்கிய கதைத் தொகுப்பு.



கண்ணுக்குத் தெரியாத விலங்குகள்

பி.எஸ்.ஆர்.ராவ்.

மார்ச், 1995, பக். 171. ரூ 27/-

சமகால அவலப் பிரச்சனைகளை விளக்கும் சமூகநாவல்.

சிறந்த நூல்களை தமிழ் மக்களுக்கு எடுத்துக் காட்டும் பணி பாராட்டப் படவேண்டியதே.

அனைத்து உலக மொழிகளில் எழுதப்பட்ட சிறந்த கட்டுரைகளும் கவிதைகளும் கதைகளும் தமிழ்மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு தமிழ் வளத்தைக் கூட்ட வேண்டும்.

தற்போது இருந்துவரும் அவலத்தை எடுத்துக் காட்டும் முயற்சி தான் கண்ணுக்குத் தெரியாத விலங்கு என்ற இந்த சமூகப் பிரஞ்ஞையுள்ள புதினம்.



சமூக நாவல்

ரேகா உனக்காக

பி. எஸ். ஆர். ராவ்.

அக்டோபர் 95. பக் 176. ரூ 32/-

வாழ்க்கை முன்னேற்ற நூல்கள் எழுதுவதில் சிறப்பிடம் பெற்றவர் திரு பி.எஸ்.ஆர். ராவ்.

தரம் தேடும் வாசகரை திருப்தி அடையச் செய்யும் சமூக நாவல் இது,

டாக்டர் மு. வ., நா. பா, ஜெயகாந்தன் வரிசையில் சறுக்குமரம் மூலம் திரு ராவ் இடம்

பெற்றுவிட்டார் என்கிறார் இந்திப் பேராசிரியர் என். ஸ்ரீதரன்.

வலுவான கதை. குறைந்த அளவே யதார்த்தமான பாத்திரங்கள், இயற்கையான மொழி நடை, உரை கல்லில் சோதிக்கப்பட்ட அறிவுரைகள் உபயோகமானவைதான்.

நாவலாக, வாழ்வியல் நூலாக சறுக்குமரம் விளங்குகிறது, இருமடங்கு லாபம் தான்.

நாவல்

தியாகச்சுடர். **பி.எஸ்.ஆர். ராவ்**. 1995. பக் 244, **ரூ**.41/-

இந்து ஆங்கில நாளேட்டில் பிரபல விமர்சகரும் வைணவக் கல்லூரி முதல்வராயிருந்தவருமான எஸ். ஆர். கோவிந்தராஜன் பல பட பாராட்டி புகழ்ந்துள்ளன நாவல் இது.

தமிழில் யுத்தத்தை அடிப்படையாகக் கொண்ட கதைகள் மிகவும் குறைவாகவே வெளிவந்திருக்கின்றன.

வாசர் விருப்பம், வேண்டுகோள் இந்நூல்.

போர் பயங்கரமானது. வெறுக்கத்தக்கது. அருவறுக்கத்தக்கதும்கூட.

போர் தவிர்க்கப்பட வேண்டும். தேவை இல்லை என மாந்தர் உணர எழுந்த நாவலே தியாகச் சுடர்.

மலேஷியப் பிரதமர் எழுதிய 'மகாதீரின் மறுபக்கம்' நூல் வெளியீட்டு விழாவுக்காகச் சமீபத்தில் மலேஷியா போயிருந்தார் கவிஞர் வைரமுத்து!

புத்தகத்தை வைரமுத்து வெளியிட, வாங்குபவர்கள் ஒவ்வொருவரும் இருபது வெள்ளியைக் கொடுக்க வேண்டும் என்று ஏற்பாடு!

ஒரு பள்ளிச் சிறுவன் மட்டும் ஒரு வெள்ளியைக் கொடுத்துவிட்டு, "நான் ஒரு வெள்ளி கொடுத்தா நூறு வெள்ளிகள் கொடுத்ததற்குச் சமம்!" என்று குறும்புடன் வைரமுத்துவின் காதில் கிசுகிசுக்க... "நான் ஒரு புத்தகம் கொடுத்தா, நூறு புத்தகம் கொடுத்ததற்குச் சமம்" என்று பதிலுக்குச் சொன்னாராம் வைரமுத்து!

—ம.செ.

ஆனந்த விகடன் 12-11-1995

திருமகள் நிலையம்

55, வெங்கட் நாராயணா சாலை,
தி நகர். சென்னை - 600 017.

போன்: 434 28 99
Fax : 434 15 59



நாயகம் ஒரு காவியம் மு. மேத்தா. பதி. 2. நவம்பர் 1995 பக் 326. ரூ 60/-

மதீனாவைப் போல் மு. மேத்தாவின் மனம் மாநபியை வரவேற்றுச் செய்யுள் சிம்மாசனம் தந்திருக்கிறது

ஒரு சத்திய சமுத்திரத்தில் சங்கமமானதன மூலம் நதியாக இருந்த மேத்தா கடலாகியிருக்கிறார் என பாராட்டுபவர் கவிக்கோ அப்துல் ரகுமான்.

நபிகள் நாயகம் (ஸல்) கவிதை வடிவிலான சிறந்த காவியம் என்கிறார் எஸ். அப்துல் வஹ்ஹாப்,

இறையுரை பரப்பிய நபிகள் நாயகத்தின் இனிக்கிற வரலாறு இது என்கிறார் டாடக்டர் சிலம்பொலி சு. செல்லப்பன்.

'என்னைப் போல் நட' என்றவர் பெருமானார். மாறுபட்ட அறிவுரை — அறவுரை யாகும் இது.

மேத்தா! மேத்தா! இத்த

கைய அரிய காவியங்களை

மேலும் தா! சிந்தனைச் செம்பல் A.K.A. அப்துஸ்ஸமது M.A. கூறுவதாவது:

நபிகள் நாயகம் அவர்களின் வரலாற்றைச் சொல்வதன் மூலமாகக் கவிஞரின் கருத்துக்களாகத் தந்துள்ள சொற்றொடர்கள், நமக்குச் சிறந்த இலக்கியத்தைப் படித்த நிறைவைத் தருகின்றன. உதாரணத்திற்கு ஒன்று-

பிறந்தபோது
எங்களுக்கு அழத் தெரிந்தது!
உன்னை
அறிந்தபோதுதானே

தொழத் தெரிந்தது!
தொழத் தொடங்கினோம்...
அதனால்
தூக்கத்திலிருந்து
எழத் தொடங்கினோம்!

நாயகக் காவியம்! புதுக் கவிதை வடிவில் புகழ்மேவிய கவிஞர் மு. மேத்தா தமிழுக்குத் தந்துள்ள பரிசு இது. தமிழரெல்லாம் பெற்றுப் பாராட்ட வேண்டுமென விழைகிறோம். இறைவன் அருள்வானாக!

ஆஸ்டின் இல்லம்
'சுஜாதா' செப்டம்பர் 1995.
பக். 82. ரூ 13.50

ஆஸ்டின் வீட்டின் மர்மம் என்ன என்பதை விளக்கிறது நாவல்.

....

நந்து என்னபாவம் செய்தான்?

....

....

அதனாலே இந்த அபாரமான ஆஸ்டின் (இல்லத்தில்) வீட்டில பெரியப்பாவே இருந்துட்டுப் போகட்டும்......
பக் 82...கடைசியாக...சுவாரஸ்யமான பகுதி... வாசகர்களே 'இதைப் படித்தால் முழு நாவலையும் ஒரே மூச்சில் படித்து விடுவீர்கள்.

நந்துவுக்கு இன்னும் மூணு வருஷமோ நாலு வருஷமோ இருக்குது. அவனை சந்தோஷமா வெச்சுக்கங்க. டூர் அழைச்சுட்டுப்போங்க. நிறைய படிச்சுக் காட்டுங்க.''

நந்துவை நர்ஸ் அழைத்து வந்தாள்...

''என்ன நந்து, பைக்குள்ள என்ன வச்சிருக்கே?''

டாக்டர் ரமேஷ் அந்த காகிதத்தை எடுத்துப் பார்த்தார்.

They say I' m going to die;

I say it's all a lie

Why should I

With so many poems unwritten.

Fruits unbitten,

Die?



கொஞ்சம் நில்லுங்கள்
அனுராதா ரமணன். ஆகஸ்டு, 1995. பக். 196 ரூ. 34/-

நூலின் தலைப்பை சொன்னது 58 வயதான... கன்னி கழியாத அமெரிக்கா செல்லும் பூரணிதான்.

இந்தியாவின் அவலங்கள் அவஸ்தைகள், சம்பிரதாய குட்டைகள்... அருவி நீராய்...

சுமையை இறக்க...நிம்மதி. யாருக்கு... பூரணிக்குத்தான்.

பூரணியின் வாழ்க்கை சோக வரலாறு.

□

எதிர் நீச்சல் அடிக்கும் உமாவின் வாழ்க்கைதான் 'ஆடாதே மயிலே!'

இரண்டு கதைகளை உள்ளடக்கிய நூல்தான் 'கொஞ்சம் நில்லுங்கள்'

நெருப்புடன் உறவு. அனுராதாரமணன் ஆகஸ்டு, 1995. பக் 208. ரூ 33/-

நெருப்புடன் உறவு. ஒரு நிமிஷம் ப்ளீஸ். டு இன் ஒன் இந்நூலில் இரண்டு கதைகள் உள்ளன.

இரண்டு கதைகளுமே வரைபடம் போல் தெரிந்தாலும் அற்புதமான வாழ்க்கைப் பாடம்.

பணத்தாசை, சுயநலம் கூடாது என சமூக வளர்ச்சிக்கு நீதி போதிக்கும் நூல் இது.



உறவு ஒன்று வேண்டும்
அனுராதா ரமணன் ஜூலை 1995 பக், 306. ரூ50/-

குடும்பச் சிக்கலை மையமாக வைத்து கதை பின்னப்பட்டிருக்கிறது பின்னல் வேலை பலே ஜோர்! அற்புதமான நாவல்.

சந்தர்ப்ப வசத்தால் பணக்காரக்குடும்பத்திற்கு மருமகளாக— வந்து— உறவுக்காக ஏங்கித் தவிக்கும் ஓர் அபலைப் பெண்ணின்கதைதான் இந்நூல்.

The library of yesterday



The library of tomorrow

வாசகர்களின் வளர்ச்சிக்கு தகவல் நூல்கள் தரும்

VARTHAMANAN PATHIPPAGAM

ARR Complex, 141, Usman Road, T. Nagar, Madras-17
(Near Panagal Park) Phone : 8257995



1 Dictionary of Synonyms and Antonyms
ஒத்த கருத்துடைய சொற்கள் — எதிர்ச் சொற்கள் அகராதி
Prof Dr. சாவித்திரி
1995 பக்கம் 300 ரூ. 45/-

ஒரே பொருளைத் தரும் சொற்கள் பல எம்மொழியிலும் உண்டு அதுபோலவே எதிரான பொருள் தரும் சொற்களும் பல உண்டு ஒரு பொருளைக் குறிக்கும் ஒரு சொல்லையே திரும்பத் திரும்பக் கூறும்போது படிப்பதற்கும் கேட்பதற்கும் அலுப்புத் தட்டும். மாறாக, ஒரே பொருளைத் தரும் வேறு வேறு சொற்களைக் கூறும்போது, உணர்ச்சி குன்றாமல் இருக்கும்; உற்சாகம் குறையாமல் இருக்கும், இங்கேகூடப் பாருங்கள், 'குன்றாமல்', 'குறையாமல்' என வரும் இரு சொற்கள் ஒரே பொருளைத் தந்து சுவை கூட்டும் பான்மையை! ஆங்கில மொழியில் beautiful, excellent, brilliant, fantastic, marvellous, superb, wonderful போன்ற பல சொற்கள் ஏறக்குறைய ஒரே பொருளைத் தந்து உணர்ச்சிப் பிரவாகமாக இன்பம் பயக்கின்றன! இவை போன்ற ஏராளமான சொற்கள் பல இதில் உண்டு. ஆங்கில மொழியில் பெரும் புலமை பெற விரும்புவோர்க்கு இந்நூலும் தேவையே!



2. Dictionary of Idioms and Phrases

மரபுச் சொற்கள் — தொடர்கள் அகராதி தமிழ் மொழி பெயர்ப்புடன்

J. ஜெயசந்தரன்

முதலியோர் 1995. பக், 522/. ரூ 95/-

மரபுச் சொற்கள், தொடர்கள் காலங்காலமாக — வழிவழியாக வழங்கி வரும் சொற்கள். பொருள் அறிந்து இவற்றை எழுதும் போதும், பேசும் போதும் பயன்படுத்தவேண்டும் இத்தகைய சொற்கள், தொடர்கள் ஆங்கில மொழியில் ஏராளமாக இருக்கின்றன. ஆயினும் தமிழ் விளக்கத்துடன் வரும் அகாரதி இஃது ஒன்றே!

ஆங்கில மொழியில் புலமை பெறப் பெரிதும் துணை செய்யும் இந்நூல்!



3. Dictionary of Proverbs

பழமொழிகள் அகராதி- தமிழ் விளக்கத்துடன்

Porf J. ஜெயசந்திரன்
ரோகினி ராதா கிருஷ்ணன்

1955 பக் 304, ரூ 45/-

பழமொழி என்பது நம் முன்னோர்கள், தங்கள் அனுபவத்தில் கண்ட அப்பழுக் கற்ற உண்மையாகும். இதில் கற்பனைக்குச் சிறிதும் இடம் இல்லை. இப் பழமொழிகள் நம் வாழ்க்கைக்கு வழிகாட்டும் இயல்பின. மேலை நாட்டுப் பழமொழிகளுக்கு ஏற்ற தமிழ் மொழி பெயர்ப்பும், தேவையான இடங்களில் விளக்கங்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. ஆங்கிலத்தில் புலமை பெற இந்நூலும் தேவையே.



4. Dictionary of Quotations With Tamil Translation

பொன்மொழிகள் அகராதி- தமிழ் மொழிபெயர்ப்புடன்

டாக்டர் சாவித்திரி
1995. பக் 406. ரு 65/-

பழமொழிகள் போலவே இந்தப் பொன்மொழிகளும் முன்னோர் அனுபவ மொழிகளே! அப்படியானால், பழமொழிக்கும் பொன்மொழிக்கும் உள்ள வேறுபாடு தான் என்ன என்ற கேள்வி எழும் அல்லவா? பழமொழி என்பது நெடுங்காலமாக வழங்கி வருவது; இந்தப் பொன்மொழிகள் பிற்காலத்தில் எழுந்தவை! மற்றபடி சிறப்பால் இரண்டும் உயர்ந்தவையே!

இத்தகைய பொன்மொழிகளைத் தாங்கி நிற்கும் இந்நூலும் ஆங்கிலப்புலமை பெறத் தேவைதான்!



5. Tamil Tamil - English Dictionary

தமிழ் - தமிழ் - ஆங்கில அகராதி

டாக்டர் சாவித்திரி 1995,
பக் 735 ரூ 110/-

சங்க காலம் எனப்படும் தொன்மைக் காலம் முதல் தற்காலம் வரையிலான ஏராளமான தமிழ்ச் சொற்களும் அவற்றிற்குரிய ஆங்கிலச் சொற்களும் உண்டு. அதனுடன் அமையாது. அந்தச் சொற்களை எப்படி வாக்கியத்தில் பயன்படுத்துவது என்பதனையும் விளக்குகிறது. இந்தத் தமிழ்-தமிழ்- ஆங்கில அகராதி மேலும் வீடு, கட்டிடங்கள், பறவைகள், நீர் வாழ்வன, ஒளி நிறக் கற்கள ஆகியவற்றுக்கு உரிய ஆங்கிலச் சொறகள் இந்நூலில் ஏராளமாக உண்டு.



6. Tamil -Tamil Dictionary

தமிழ் - தமிழ் அகராதி

டாக்டர் மு. நிலாமணி, டாக்டர் கலா சே, தாச்கர் 1995. பக். 908 ரூ 140/-

உலகிலேயே பழம் பெருமை வாய்ந்த மொழிகளுள் முதன்மையாக விளங்குவது, தமிழ் மொழி கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி நம்மொழி எனச் சான்றோர் இதன் பழமையைச் சுட்டிக்காட்டி மகிழ்வர்! தாம் அறிந்த மொழிகளிலேயே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம் எனப்பூரிப்படைகிறார், பாரதியார். இப்படி ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து வரும் நம் அருமை மொழியில் உள்ள சொற்களின் பொருளை எளிதில் அறிய முடிவதில்லை. இந்த அகராதி உங்கள் கையில் இருந்தால் பழந்தமிழ் இலக்கியச் சொற்களாயினும் பிற்காலச் சொற்களாயினும் யாவற்றிற்கும் இனிய எளிய பொருளை அறியலாம்.

வரப்பெற்றோம்

கவிஞர் தமிழ் ஒளி— நூல்கள்

1. பாடு, பாப்பா 1989. பதி 2, ரு, 7-50
2. கண்ணப்பன் கிளிகள், 1988, பதி 3. ரூ. 7-50
3. உயிரோவியங்கள். 1889. ரூ 10-50
4. தமிழ் ஒளியின் கவிதைகள் 1988. பதி 1. ரூ 12-00
5. மக்கள் கவிதைகள் 1987. ரூ. 16-00

கிடைக்குமிடம்:

பதிப்பாசிரியர்: செ. து. சஞ்சீவி

புகழ்ப் புத்தகாலயம் 48, பிள்ளையார் கோயில் தெரு
சென்னை — 600 030

நூலகம் இலக்கியம் வளர்ச்சிக்கு, வாழ்த்தி உதவிய புரவலர்கள் போஷகர்கள் விவரப்பட்டி......

கல்மேல் எழுத்து

மிக்க நன்றியுடன் : ' இந்திரா பெருமாள்''

1. பேராசிரியர் கு. பாலசுப்ரமணியன், விவசாயப் பல்கலை நூலகர் (ஓய்வு) கோவை 46 (ரூ 1000) (17-2-95 வெள்ளிக்கிழமை)
2. திருமதி மரகதம்மாள், 554, ராஜவீதி, கோவை-1 (ரூ. 2000)
3. திருமதி விஜயலட்சுமி திரு C.S தியாகராஜன் கோவை- (ரூ. 1000) செல்வன் ஷியாம் செல்வி ஷியாமளி
4. டாக்டர் பூவண்ணன், கோவை-11 (ரூ 1500)
5. திருமதி ஸ்ரீ வள்ளி, திரு. சண்முகம் சஞ்சீவிநகர், சென்னை-106 (ரூ. 2000)
6. திருமதி திரு. தணிகாசலம் முதலியார்—கெஜெந்திரா என்டர்பிரைஸஸ் பிராட்வே, சென்னை-1 (ரு. 1000)+ பின் அட்டை விளம்பர உதவி
7. திருமதி ராதை, திரு தருமலிங்கம் செல்வி காயத்ரி எழும்பூர், சென்னை-8 (ரூ. 1000)
8. திருமதி பிரேமகுமாரி, அண்ணா நகர், சென்னை-40 (ரூ. 1000)
9. டாக்டர் இலக்குமி நாராயணன், தமிழ்ப் பேராசிரியர் துறைத்தலைவர், வைணவக்கல்லூரி, சென்னை-106 (ரூ. 1000)
10. நூலகர் குமாரவேல் ரங்கநாதன், நாகர்கோவில் (ரூ. 1000)
11. பதிப்புச் செம்மல், தமிழவேள் பேராசிரியர் ச. மெய்யப்பன் மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம் (ரூ. 6000) 30 சந்தாக்கள் மூலமாக
12. பேராசிரியர் C ராஜமாணிக்கம், பச்சையப்பன் கல்லூரி சென்னை-30 (ரூ. 1000)
13. திரு டி. எஸ். ராமலிங்கம், நர்மதா பதிப்பகம் சென்னை-17 (ரூ 2000)
14. திரு ரவி தமிழ்வாணன், மணிமேகலை பிரசுரம் சென்னை-17 (ரூ1000/-) விளம்பர உதவி.

மணிமேகலைப் பிரசுரத்தின் பயனுள்ள நூல்கள் !

புத்தகங்கள் பிறந்த கதை 15.00; புத்தகங்களை பைண்ட் செய்வது எப்படி? 14.00; உலகப் புகழ்பெற்ற நூல்கள் 15.50; உங்கள் படைப்புகளை நூலாக்கி வெளியிடுவது எப்படி? 15.00; வீட்டு வாடகை மற்றும் பொது நூலகங்களை நிர்வகிப்பது எப்படி? 10.00; உலகின் தலை சிறந்த நூலகங்களும், விவரங்களும் 28.00; பத்திரிகையுலகக் கலைச் சொற்கள் 7.50; பத்திரிகைத் துறை நிர்வாகம் 7 00; பத்திரிகைச் செய்திகளை எடிட் செய்வது எப்படி? 10.00; விமர்சனம் எழுதுவது எப்படி? 7.00; பத்திரிகையுலகத் தர்மங்கள் 12 00; பத்திரிகைகளின் வகைகளும் வேறுபாடுகளும் 10.00; பத்திரிகையாளர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டிய சட்டங்கள் 13.00; தமிழ்ப் பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும் 15.00; இந்தியப் பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும் 10.00; உலகப் பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும் 13.00; உலகின் தலைசிறந்த நாளிதழ்கள் 14.00; இந்தியப் பத்திரிகைச் சுதந்திரம் 11.00; தமிழகப் பத்திரிகைத் துறை முன்னோடிகள் 10.50; இந்தியப் பத்திரிகைத் துறை முன்னோடிகள் 11.50; உலகப் பத்திரிகைத் துறை முன்னோடிகள் 13.50; கம்போஸிங் தொழிலைக் கற்றுக்கொள்ளுங்கள் 18.00; புரூஃப் திருத்துவது எப்படி? 9.00; ஸ்கிரீன் பிரிண்டிங் தொழிலைக் கற்றுக்கொள்ளுங்கள் 15.00.

மேற்கண்ட புத்தகங்களுள் தேவையானவற்றை வி.பி.பி. யில் பெறக் கடிதம் எழுதுங்கள். பாதுகாப்பாக அனுப்பி வைக்கிறோம். தபால்காரர் புத்தகங்களை உங்களிடம் தரும் போது பணம் செலுத்தினால் போதும் (தபால் செலவு தனி) சென்னையில் இருப்பவர்கள் நேரில் வந்து வாங்கிக்கொள்வது சிக்கனம். ஷோரும் விற்பனை காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை. ஞாயிறு விடுமுறை. கடிதம் எழுதவேண்டிய முகவரி.

மணிமேகலை பிரசுரம்

தபால் பெட்டி எண்: 1447,
4, தணிகாசலம் சாலை,
தியாகராயநகர், சென்னை-600017.
தொலைபேசி 4342926 : தொலை நகல் : 4346082.

மகத்தான பதிப்பகம்
"மணிமேகலைப் பிரசுரம்"

திரு. மறைமலை ராமசாமி

தமிழ்வாணன் | துணிவே துணை | லேனா தமிழ்வாணன்

ஓர் எழுத்தாளர் தமது எழுத்துக்களைப் புத்தகமாக்கிப் பார்ப்பதற்காக மனைவியின் நகைகளையே விற்றுவிடத் துணிந்தார் என்றால், அவர் எப்படிப்பட்ட புரட்சியாளராக இருக்க வேண்டும்! கணவர் எதற்காகக் கேட்கிறார் என்ற காரணத்தை அறிந்தும் கூட கலங்காமல், நகைகளைக் கழற்றிக் கொடுத்த அந்த அம்மையார் தான் எப்படிப்பட்ட புதுமையாளர்! இந்தப் புரட்சியும், புதுமையும் இணைந்து எழுப்பிய தமிழ்க் கோயில்தான் இன்று சென்னைப் பெருநகரின் இதயப் பகுதியில் இயங்கிக் கொண்டிருக்கிறது பதிப்பகமாக.

அந்தப் புரட்சி எழுத்தாளர் வேறுயாருமல்ல; தமிழ்த் தாயின் தவப்புதல்வர் — தலை சிறந்த சிந்தனையாளர் தன்னேரில்லா எழுத்தாளர் — தலை வணங்காத் தமிழர்— தமிழ்வாணன் அவர்கள் தான்! புலமை பெற்ற தமது துணைவி யாரின் பெயரில் அவர் நிறுவியதுதான், அணிதிகழ் நூல்களை அழகுற வெளியிடும் மணிமேகலை எனும் மகத்தான பிரசுரம்.

ஆரம்பத்தில் தமிழ்வாணன் நூல்களை லிஃப்கோ, பாரி நிலையம், அருணா, உமா போன்ற பதிப்பகங்கள்தான் வெளி யிட்டு வந்தன. பிறகு அவரும் 'வானதி' திருநாவுக்கரசும் இணைந்து 'ஜில் ஜில்' பதிப்பகத்தில் சிறுசிறு வெளியீடுகளை அச்சடித்துத் தாங்களே சுமந்து சென்று பொதுக் கூட்டங்களில்

விற்றனர். இந்தச் சூழ்நிலையில் தான் தமது எழுத்துக்களைத் தாமே வெளியிட விரும்பி 1955-இல் சொந்தமாக மணி மேகலைப் பிரசுரத்தைத் தொடங்கினார் தமிழ்வாணன்.

ஒரு தொப்பி, கறுப்புக் கண்ணாடி துணிவே துணை என்ற வாசகம்— இந்த மூன்றும் தமிழ்வாணன் அவர்களை நினைவு படுத்தும். இந்தக் குறியீடுகளே மணிமேகலைப் பிரசுரத்தின் இலச்சினையாக விளங்குகின்றன. ''சென்னை தியாகராய நகர், இலக்கம் 4, தணிகாசலம் சாலை'' என்று முகவரியே எழுதத் தேவையில்லை; தொப்பியும், கறுப்புக் கண்ணாடியும் மட்டுமே வரைந்து தமிழ் நாட்டின் எத்த மூலையிலிருந்து அனுப்பினா லும் கடிதங்கள் மணிமேகலைப் பிரசுரத்தை வந்தடைந்து விடும்.

'மணிமேகலை' யின் முதல் வெளியீட்டின் தலைப்பு: ''துன்பமே போ' ,

துணிவே துணையாகக் கொண்டு, துன்பங்களைத் தூள் தூளாக்கி, சோதனைகளைச் சாதனைகளால் வென்ற தமிழ் லாணன் தமது பத்திரிகையில் கேள்வி — பதிலால் பல வேள்வி களைச் செய்தார்; தமது பதிப்பகத்தில் பூத்த புத்தகப் பூக்க ளால் வாசகர்களின் தன்னம்பிக்கையை வளர்த்தார். தமிழ் கூறு நல்லுலகத்து வாசகப் பெருமக்கள் கல்கண்டை நாடும் எறும்புகளாகவும், பூக்களை மொய்க்கும் ஈக்களாகவும் மாறினர்.

எதிர்பாரா வேளையில் அந்த மாமனிதர் இமயமலை வீழ்ந்ததுபோல் வீழ்ந்த விட்டபோது, தமிழகம் தவப் புதல் வனை இழந்து தவித்தது. உருகியது உள்ளப்; பெருகியது கண்ணீர்! இவர் போல் யார் இனி? 'கல்கண்டை' இனி சுவைக்க முடியுமா? என்றொரு ஐயம்; 'மணிமேகலை' யின் தனிப்புகழ் நூல்கள் இனி வெளிவருமா? என்றொரு அச்சம்.

ஆனால், அந்த ஐயத்தையும், அச்சத்தையும் அகற்றி, தமிழ்வாணரின் கனவுகளை நனவாக்க முன் வந்தனர் அவரது வாரிசுகள் லேனா தமிழ்வாணனும், ரவி தமிழ்வாணனும்.

தந்தையாரின் பொறுப்புக்களைத் தனயர்கள் ஏற்றுக் கொண் டனர். 'கல்கண்டு' லேனாவின் பொறுப்பிலும், 'மணிமேகலைப் பிரசுரம்' ரவியின் நிர்வாகத்திலும் பட்டொளி வீசிப் படிக்கும் வர்க்கத்தைப் பரவசப் படுத்தக் காண்கிறோம்.

இராமாயணத்தில் ரவிகுல திலகனுக்கு ஒரு லெட்சுமணன். இங்கே லெட்சுமணனுக்கு (அதுதான் லேனாவின் முழுப்பெயர்) ஒரு ரவி. இளவலான ரவி மணிமேகலைப் பிரசுரத்தின் நிர்வா கத்தைத் திறம்படச் செய்து வருகிறார். உழைப்பிலும், பண் பிலும் தந்தையையும் தாயாரையும் முன்னோடிகளாகக் கொண்டவர். பி. காம். பட்டதாரி.

அலுவலகத்தில் ரவியின் பணியாற்றும் திறனைப் பார்த் தால், நிர்வாகப் படிப்புக்கு அதையே பாடமாக வைக்கலாம் என்று தோன்றும். எழுத்தாளர், பத்திரிகையாளர் என்று வருபவர்களை வரவேற்று இன்முகத்துடன் உரையாடுகிறார். எல்லாப் பணிகளுக்கும் குறிப்பெழுதி வைத்துக்கொண்டு ஒவ் வொன்றாக முடிக்கிறார். அடிக்கடி சகோதரருடன் தொலை பேசியில் தொடர்புகொண்டு ஆலோசனை பெறுகிறார். ஒவ்வொரு புதன் மாலையும் சகோதரர்கள் இருவரும் தங்களது கடற்கரை இல்லத்திற்குப் போய் மனம் விட்டுப் பேசித் திரும்புவர்.

பதிப்புத் துறையில் முத்திரை பதித்த மணிமேகலைப் பிரசுரம், தமிழ்வாணன், லேனா தமிழ்வாணன் மற்றும் ஆசிரியர் குழு எழுதிய நூல்களை வெளியிட்டு வந்தது. தமிழ் வாணன், லேனா நூல்களைத் தவிர மற்றவை 'ஆசிரியர் குழு, என்ற பெயரிலேயே வெளி வந்தன. இப்போது எஸ். ஏ. பி. ஜா. ரா. சுந்தரேசன், புனிதன், ஆர்னிகா நாசர், ஜே. டி. ஆர், படுதலம் சுகுமாரன், சுப்ரஜா, ப்ரியா கல்யாணராமன், கே. ஜி. ஜவஹர், மு. அப்பாஸ் மந்திரி, விஜயநிலா ப தமிழினியன், நா. ரா. பண்டரிநாதன். என். சி. மோகன்தாஸ், தஞ்சை செல்வன், உமா மகஸ்வரி, ராம சுப்ரமணியன், எஸ். சங்கர நாராயணன், வெ. தமிழழகன் போன்ற பிரபல எழுத்தாளர் களின் படைப்புக்களை அவர்கள் பெயரிலேயே வெளியிடுகிறது மணிமேகலைப் பிரசுரம்.

ஆயிரத்து அறுநூறுக்கும் மேற்பட்ட தலைப்புகளில் நூல்களை வெளியிட்டிருப்பதும், அவை அனைத்துமே இன்றும் விற்பனையில் உள்ளதும் மணிமேகலைப் பிரசுரத்தின் மிகப் பெரிய சாதனை. புத்தக விலைப்பட்டியலே 45 பக்கங்கள் என்றால் பதிப்பிக்கப்பட்ட நூல்கலையும் மறுபதிப்பு நூல்களையும் நீங்களே கணக்கிட்டுக் கொள்ளலாம்.

தமிழ்ப் பதிப்பக உலகில் மிகக் குறைந்த காலத்தில் அதிகமாக விற்பனையாகிச் சாதனை படைத்திருப்பது 'பிரபலமானவர்களின் விலாசங்கள்' 19 பதிப்புக்களைக் கண்டுள்ள இந்தப் பிரபலமான நூலைத் தயாரிப்பதில் மேற்கொண்ட கடின உழைப்பை ரவி தமிழ்வாணன் இப்படி விளக்குகிறார்:

"ஆரம்பத்தில் இந்தப் பிரபலங்களின் விலாசம் சாமானியத்தில் கிடைக்கவில்லை. குருவி தானியம் சேமிப்பது போல் ஒவ்வொன்றாகச் சேர்த்தோம். இதற்காக ஒரு படையே இயங்கியது, இந்த முகவரிகளை எல்லாம் ஒரு வழியாகக் கஷ்டப்பட்டுத் திரட்டி வெளியிட்டபோது, பலர் நிறையக் குறை சொன்னார்கள், அவற்றையெல்லாம் புறக்கணித்து விடாமல் நோட்டுப் போட்டுக் குறித்துக்கொண்டு மறுபடியும் எங்கள் படையை முடுக்கிவிட்டு விலாசங்களைச் சேகரிக்க ஆரம்பித்தோம்

'இது ஒரு விலாச புத்தகம். இதில் படிக்க என்ன இருக்கிறது. என்று நூலகம் கூட இந்த நூலை வாங்க மறுத்து விட்டது. எங்களுக்கோ பெரிய இடி! ஆனாலும் நாங்கள் சோர்ந்து விடவில்லை. பிறகு 19 பதிப்புக்குள் இரண்டை மட்டும் நூலகம் ஏற்றது.

ஆனால் இன்றைய நிலைமையோ முற்றிலும் மாறுபட்டிருக்கிறது. 'பிரபலங்களின் நூல்' இல்லாமல் எந்த ஒரு பெரிய நிகழ்ச்சியையோ, விழாவையோ நடத்தமாட்டார்கள் என்கிற நிலைமை. நாகேஷ் தன் மகன் ஆனந்த் பாபு திருமணத்துக்கும், சுகாசினி திருமணத்துக்கு சாருஹாசனும் இப்படிப் பலரும் நேரில் வந்து இந்த நூலை வாங்கிச் செல்கின்றனர். ரஜினி

சார் கூடத் தன் உதவியாளர் மூலம், புத்தாண்டு வாழ்த்து அனுப்ப இரு நூல்களை விலைக்கு வாங்கியிருக்கிறார்.

சென்னை வானொலி நிலையமும், தொலைக்காட்சி நி-லையம் மற்றும் பத்திரிகை அலுவலகங்களும் 'இந்நூல் வேதப் புத்தகம் போல் பயன்படுகிறதென்று' கருத்துத் தெரிவித்துள்ளனர். பலரும் தங்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்கும், விழாக்களுக்கும் அழைப்பிதழ்களில் விலாசங்களை எழுதுவதை விட எளிதாக இருக்கும் என்று இரண்டு பிரபலம் நூல்களை வாங்கி அப்படியே வெட்டி ஒட்டி அனுப்புகிறார்கள் என்பதே இதன் மிகச் சிறந்த வெற்றிக்குச் சான்று''

கடிதம் மூலமும் தொலைபேசி மூலமும் விலாசங்களை உறுதி செய்வதோடு சம்பந்தப்பட்டவர்களை நேரிலும் சந்தித்து விலாசங்களைப் பெறுகிறார்கள். விலாசங்களைக் கம்ப்யூட்டரில் பதிவு செய்து அவ்வப்போது கூட்டிக் குறைத்து முழுமையான நூலாக வெளி வருகிறது இந்தப் பிரபலமான நூல்.

இன்னொரு புதுமை — இந்த நூலில் விளம்பரங்கள் சேர்த்துப் பிரசுரிக்கப்படுகிறது.

புத்தகத் தயாரிப்பின் அடிப்படையான அம்சம் தலைப்புத் தேர்வு. தலைப்பின் சிறப்பே விற்பனையை அதிகரிக்கும். மணிமேகலைப் பிரசுரம் புத்தகத் தலைப்பு ஆலோசனைகளை வாசகர்களிடமிருந்தே பெற முடிவு செய்து நல்ல நூல் தலைப்புகளை எழுதி அனுப்பினால் 200 ரூபாய் பரிசளிப்பதாக அறிவித்தது. மொத்த பரிசுத் தொகை ரூ5000/ நூற்றுக்கணக்கான அருமையான தலைப்புக்கள் கிடைத்துள்ளனவாம. அந்தத் தலைப்புகளில் நூல்களைப் பிரசுரிக்க உள்ளார்கள்.

வாழ்வு முன்னேற்றம், மனித குணநலன்களின் மேம்பாடுகள். மக்கள் தொடர்பு, உலக விஷயங்கள், சுற்றுப்புறச் சூழல்கள், அறிவியல், அறிவியல் வளர்ச்சி, பொது அறிவு, விலங்கியல், அரசு நிர்வாக இயல், அரசு விதி முறைகள், அறிவுக் கட்டுரைகள், மொழிகளைக் கற்றுக்கொள்ளுதல்,

அகராதி, தொழில் நுட்பம், பத்திரிகை இயல், மருத்துவம் ஜோதிடம், சட்டம், விளையாட்டு, வாழ்க்கை வரலாறுகள் என எல்லா வழிகளிலும் நூல்களைத் தந்துள்ள அறிவுக் களஞ்சியமாக மணிமேகலைப் பிரசுரம் விளங்குகிறது.

இன்றைய கால கட்டத்தில் தொழில் சம்பந்தப்பட்ட நூல்களுக்கு மணிமேகலைப் பிரசுரத்தைப் பொறுத்தவரையில் நல்ல விற்பனையுள்ளது. கம்ப்யூட்டர் அறிவியல் மற்றும் குழந்தைகளுக்கான நூல்களையும் பிரசுரிக்கிறார்கள்.

தொழில், நிதித்துறைப் புத்தகங்களை ஏன் வெளியிடுகிறார்கள்? இதோ நிர்வாக இயக்குநர் ரவி கூறுகிறார்:-

Do it Yourself என்பதுதான் ஒவ்வொரு மனிதருக்குமான வாழ்க்கைப் பொன்மொழி என்பது என் கருத்து.

வேலையில்லாத் திண்டாட்டத்தில் இளைஞர்கள் மூழ்கி அல்லல்பட்டு வரும் இந்நாளில் அவர்களுக்கு எதையேனும் கற்றுக்கொடுத்துக் கரையேறச் செய்வதுதான் சிறந்த பணியாக இருக்க முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

எங்களது நூல்களின் வாயிலாக எத்தனையோ இளைஞர்கள் சொந்தக்காலில் நிற்கவேண்டும் என முடிவெடுத்து களத்தில்இறங்கி இருக்கிறார்கள். ஒரு நூல் ஒரு தொழிலை முழுமையாகக் கற்றுக்கொடுப்பது என்பது சாத்தியப்படாத ஒன்று. ஆனால் அந்தத் தொழிலை பற்றிய அடிப்படை விஷயங்களை அந்த நூல் சொல்லிக்கொடுத்துவிடும். அந்த 'அடிப்படை அறிதல்' என்கிற தகுதியோடு களத்தில் இறங்குபவர்களுக்கு மேற்கொள்ளும் தொழிலின் நடைமுறை சுலபமாக இருக்கும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் போர் முனைக்கான வீரர்களைத் தயார் படுத்துகிற வேலை எங்களுடையது. இதைச் செய்வதில் நாங்கள் பெருமை கொள்கிறோம்.

இதைப்போலவே, 'பல்வேறு இசைக் கருவிகளை வாசிப்பது எப்படி?' என்ற வரிசையில் பல நூல்களை வெளியிட்டு உள்ளனர்.

புத்தகத்தைப் படித்துவிட்டுப் புல்லாங்குழல் வாசிக்க முடியுமா? முடியும் என்கின்றன. மணிமேகலைப் பிரசுரம் வெளியிட்டுள்ள 'இசைக் கருவிகளை வாசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்' தலைப்பு நூல்கள். இவை தமிழுக்குப் புதிய முயற்சி. கருவியைக் கையில் பிடிப்பதிலிருந்து இயக்குவது வரை பாடம் எடுக்கிற மாதிரி எழுதப்பட்டுள்ளன.

தமிழர்கள் உலகில் எந்தெந்த மூலைகளிலெல்லாம் இருக்கிறார்களோ அங்கெல்லாம் 'மணிமேகலை'யின் நூல்களுக்கு மரியாதையும் வரவேற்பும் உள்ளது. ஸ்ரீலங்கா, மலேசியா, ஆஸ்திரேலியா, அரபு நாடுகள் என்று உலகின் பல்வேறு நாடுகளுக்குப் புத்தகங்கள் அனுப்பப்படுகின்றன.

மணிமேகலைப் பிரசுர நூல்களை எப்படிப் பெறுவது? ஒன்று புத்தக விலையுடன் ரூ. 7.00 சேர்த்து மணியார்டர் அனுப்பிப் பெறலாம். அல்லது முதலில் பணம் அனுப்பாமல் கடிதம் மட்டும் எழுதி வி. பி. பி. யில் பெறலாம். சென்னை வாசிகள் நேரடியாக ஷோரூமில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை பெறலாம். ஃபேக்ஸ் மூலமும் ஆர்டர் செய்யலாம் ஃபேக்ஸ் எண்: 044-4346082. தொலைபேசியிலும் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி எண்: 4342926. 'ஷோரூம்களை விட நாங்கள் அதிகம் நம்புவது புத்தகக் கண்காட்சிகளைத் தான்' என்றார் ரவி தமிழ்வாணன்.

மணிமேகலைப் பிரசுர நூல்கள் பல பரிசுகளை வென்றுள்ளன. லேனா தமிழ்வாணன் எழுதிய 'ஒரு பத்திரிகையாளனின் மேலைநாட்டுப் பயண அனுபவங்கள்' நூலுக்கு தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பரிசாக ரூ. 5000/- கிடைத்துள்ளது. அவரது 'ஒரு பக்கக் கட்டுரைகள் பாகம் —12, பாரத ஸ்டேட் வங்கியின் பரிசான ரூ 3000-ஐ வென்றிருக்கிறது.

திரு. நாட்யாச்சார்யா எழுதிய 'புல்லாங்குழல் வாசிக்கக் கற்றுக்கொள்ளுங்கள் நூலை தமிழக அரசு சிறந்து நூலாகத் தேர்ந்தெடுத்து ரூ. 5000 வழங்கியது.

மேலும் திருமதி. சுமங்கலியின் 'அம்மா' என்ற நாவலும், திரு. ராம சுப்ரமணியத்தின் 'மணிபர்ஸில் ஒரு போட்டோ'வும் அனந்தாச்சாரி அறக்கட்டளையின் பரிசுகளை வென்றுள்ளன.

டெல்லி சில்ரன்ஸ் புக் ட்ரஸ்ட், சிறந்த குழந்தை இலக்கிய மாக 'சின்னஞ் சிறிய போதனைக் கதைகளைத் தேர்தெடுத் துள்ளது.

அரசின் ஆதரவு பதிப்பகத்தாருக்கு எந்த அளவில் உள்ளது? ரவி தமிழ்வாணனின் கருத்துக்களைக் கேட்டோம்:-

நூலின் 500 பிரதிகளை அரசு விலை கொடுத்து வாங்கு வதன் மூலம் நூல் வெளியீட்டாளர்களுக்கு உதவுகிறது.

இதனை ஆயிரமாக உயர்த்தினால் நல்லது. கரும்பலகைத் திட்டத்தின் கீழ் பாடசாலைகளுக்கும் புத்தகங்கள் வாங்கப் படுகின்றன. வயோதிகர் கல்வித் திட்டத்தின் கீழும் நூல்களை வாங்குகிறார்கள். அரசு நடத்தும் அறிவொளி இயக்கம் மற்றும் பல்கலைக் கழகங்கள் புத்தக விற்பனைக்கு ஆதரவு நல்குகின்றன.

நூல்களை வெளியிடும் பத்திரிகைத் தாள்களின் விலை நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டே போகிறது. இதனால் எதிர்காலத்தில் நடுத்தரக் குடும்பத்தினர் நூல்களை வாங்கவே அஞ்சுவார்களோ என்ற நிலை உள்ளது.

அகவிருள் அகற்றி அறிவொளி பெருக்கும் பணியில் ஈடு பட்டு ஓயாது உழைத்து வரும் தமிழ்வாணன் சகோதரர்கள் இன்னும் புதிய புதிய தலைப்புக்களில் பயனுள்ள நூல்களை வெளியிட்டு மக்களின் அறிவுப் பசியைப் போக்குவார்கள் என்று நம்புவோம். மணிமேகலைப் பிரசுரத்தின் மாண்புறு நூல்கள் தமிழர் வாழும் திசையெல்லாம் சென்று தமிழ்ப்பணி புரிந்து கற்றார்க்கும் தமிழார்வம் பெற்றார்க்கும் களிப் பருளும் என்பது உறுதி. மாதவி மகள் மணிமேகலை அமுத சுரபியால் வயிற்றுப் பசியைப் போக்கியது போல் மணி மேகலைப் பிரசும் நூல்கள் எனும் அமுதசுரபி மூலம் அறிவுப் பசியை நீக்குகிறது. மணிமேகலையின் தொண்டு தொடரட்டும்.

□

பரிசும் பாராட்டும்.

திருமதி ரங்கம்மாள் நாவல் பரிசுபெற்ற

எழுத்தாளர் பேராசிரியர் வே. சபாநாயகம்

கோவை கஸ்தூரி சீனிவாசன் டிரஸ்ட் 'திருமதி ரங்கம்மாள் நாவல் பரிசு' **முடிவுகள்**

கோவை கஸ்தூரி சீனிவாசன் அறக்கட்டளை ஆண்டுதோறும் வழங்கும் 'திருமதி. ரங்கம்மாள் நாவல் பரிசு' முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கடந்த 5- ஆண்டுாளாக வழங்கப்பெறும் இப்பரிசு ஒவ்வொரு ஆண்டிலும் இந்தியாவின் பிரசுரமாகும் சிறந்த தமிழ் நாவலுக்கு ரூ. 10,000/- பரிசாக அளிக்கப்படுகிறது. நூலாசிரியருக்கு ரூ. 7500/-ம் பதிப்பகத்திற்கு ரூ 2500/-ம் அளிக்கப்படுகிறது

அதன்படி, 1993-ஆம் ஆண்டின் சிறந்த நாவலாக திரு வே. சபாநாயகம் எழுதி குறிஞ்சிப்பாடி மணியம் பதிப்பகம் வெளியிட்ட 'ஒரு நதி ஓடிக் கொண்டிருக்கிறது' என்ற நாவலும், 1994ஆம் ஆண்டின் சிறந்த நாவலாக, நாஞ்சில் நாடன் எழுதி கோவை விஜயா பதிப்பகம் வெளியிட்ட 'சதுரங்கக் குதிரை' என்ற நாவலும் தேர்வு செய்யப்பட்டு நாவலாசிரியர்களுக்கும் பதிப்பகத்தார்க்கும் பரிசுத் தொகைகள் அனுப்பப்பட்டுவிட்டன.

பேராசிரியர்
வே. சபாநாயகம்
எம்.ஏ.,பி.எஸ்சி.,எம் எட்.,;
'அகிலம்'
99, பெரியார் நகர்,
விருத்தாசலம்— 606001
தொலைபேசி : 60588

—இதனை கஸ்தூரி சீனிவாசன் அறக்கட்டளையின் மானேஜிங் டிரஸ்ட்டி திரு.சி.வி. சௌந்திரராஜன் அறிவித்துள்ளார்.

படியுங்கள்

பெற்றோர் - மாணவர் கையேடு



ஆசிரியர்: சிந்தனைச்சிற்பி **அல்ஹாஜ் அப்துல் பாரி**
சிங்கப்பூர்

நவமணி பதிப்பகம்
12, 2வது பெருஞ்சாலை
சென்னை- 600 004.
(தொலைபேசி: 4991 161)

சிந்தனைச் சிற்பி அப்துல்பாரி

மயிலாடு துறையை அடுத்த நீடுரில் பிறந்த (26.11.1953) அப்துல்பாரி, அன்னையின் (மகதியா பீவி) அன்புரைகளாலும், தந்தையின் (அப்துல் மஜீது) அறிவுரைகளாலும் வளர்க்கப் பட்டார்.

பள்ளிப்படிப்பு முடிந்ததும், கடல் கடந்து சென்று, தன் உடன்பிறப்புகளுடன் சேர்ந்து மாணிக்க வணிகத்தில் ஈடு பட்டார். இன்று நசீம் பிரதர்சு சிங்கப்பூர் கிளையின் நிர்வாக இயக்குநராக இருக்கிறார்.

ஏராளமான நூற்களைப் படிப்பதும், படிப்பதை சிந்திப்ப துமே இவரது பொழுதுபோக்கு. ஆனால், வெறும் புத்தகப்புழு அல்ல. சிந்தித்துக் கண்ட முடிவுகளை செயல் படுத்துவதே வாழ்க்கையில் இவர் கண்ட வெற்றியின் அடிப்படை. அனுபவ அறிவே இவரது சிந்தனைக்கு அடிப்படை.

''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற சிறந்த... திறந்த உளம் படைத்தவர். அதன் வெளிப்பாடே பெற்றோர் மாணவர் கையேடு நூலும், இதைத் தொடர்ந்து வர இருக்கும் நூற்களும்.

உயர்ந்த வழிகாட்டி

மாணிக்க வியாபாரிகளான நசீம் உடன் பிறப்புகள் தங்கள் வெள்ளி விழாப் பரிசாக 1993இல் இந்த அருமையான கல்வி நூலை முதலில் வெளியிட்டார்கள்.

பெற்றோர், மாணவர்களுக்காகத் தமிழில் வெளி வந்துள்ள மிகச்சிறந்த வழிகாட்டி நூல் இது. இதனை படித்த பெற்றோர்களும் சரி, ஆசிரியர்களும் சரி, இவ்வளவு அருமை யான, எளிமையான நூலை இதுவரை நாங்கள் படித்தது இல்லை என்று பாராட்டினார்கள். ''கடுகு சிறுத்தாலும் காரம் போகாது'' என்பதற்கு இந்த நூல் ஒரு எடுத்துக்காட்டு. கல்வி நூல்களில் இது ஒரு திருக்குறள்.

இந்த சிறந்த நூலை அச்சிட்டு. மாணவர்களுக்கு அடக்க விலையில் வழங்க விரும்பும் பள்ளிக்கூடங்கள், நூலாசிரி யரிடம் எழுத்துவழியே அனுமதி பெற்று அச்சிட்டு வெளியிட லாம்.



படித்துக் கிழித்தான்!

"படித்துக் கிழித்தான்" என்பார்கள் ஆனால், பிள்ளைகள் கிழித்துப் படிப்பார்கள்!

தடுக்காதீர்கள்! கிழிக்கட்டும்! கிழிப்பதற்கு என்றே பழைய புத்தகங்கள் - பத்திரிகைகளைப் போட்டு வையுங்கள்.

புத்தகங்களுடன் பிள்ளைகளுக்கு உறவு ஏற்படட்டும். முதலில் கிழிப்பார்கள் பின்பு படம் பார்ப்பார்கள். அதன்பின் படிப்பார்கள்.

—அட்டை அங்கே விளக்கம் இங்கே

பயண நூல்

ஆசிரியை: திருமதி.லெட்சுமி மாரிச்சாமி

ஆகஸ்டு 1994 பக். 64. ரூ. 16.

நவமணி பதிப்பகம், சென்னை—600 004

கங்காராம் துரைராஜ்ஜின்—

'மஹாஜனம்' இதழில் 13 வாரம் தொடராக தொடர்ந்து வெளிவந்தது', தற்போது நூல் வடிவில் உங்கள் கைகளில்.

ஒரு காலத்தில் கைதிகளின் உறைவிடமாக இருந்த அந்தமான் தீவு, இப்போது அழகிய சுற்றுலாத் தலமாகத் திகழ்கிறது. அங்கு செல்ல விரும்புவோர்க்கும் செல்ல இயலாதவர்களுக்கும் இச்சிறுநூல் பயனுள்ளதாக அமையும்.

இதழியல் நூல்கள்



19-ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள்

முனைவர் அ. மா. சாமி
(ஆசிரியர்)

முனைவர் அ. அய்யூப்
(வெளியீட்டாளர்)

தமிழ் இதழியல் இரு நூற்றாண்டு வரலாறு கொண்டது. ஆனால், முறையாக வரலாறு தொகுக்கப்பட்டிருப்பது இதுவே முதல்முறை.

பல புதிய உண்மைகள் வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளன. பழைய தவறுகள் திருத்தப்பட்டிருக்கின்றன.

தமிழுக்குப் பெருமை சேர்க்கும் நூல்.

புதிய படங்கள், புதிய செய்திகளுடன் கூடிய விரித்த இரண்டாம் பதிப்பு.

தமிழில் இஸ்லாமிய இதழ்கள்

இந்நூலை(தமிழில் இஸ்லாமிய இதழ்கள்)அச்சிட்டு வெளியிடும் முழுச் செலவையும் ஏற்றுள்ளார் இந்த சீதக்காதி. இதற்காக இவருக்கும் இஸ்லாமிய உலகம் முழுவதும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறது.

—முனைவர் - ஹாஜி வள்ளல் இலியாசு

சீர்மிகு சிதம்பரத்தில் பிறந்து வளர்ந்த முனைவர் ஹாஜி முகம்மது இலியாசு அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்துப்பட்டம் பெற்றபின், பேங்காக் சென்று சாதாரண ஊழியராக மாணிக்க வியாபாரத்தில் ஈடுபட்டார். இன்று உழைப்பால் உயர்ந்து மாணிக்க வணிகத்தில் முடி சூடா மன்னனாகத் திகழ்கிறார். குறிப்பாக அமெரிக்க வைரத்தில் இவரே சக்கரவர்த்தி.

ஈட்டல், ஈதல், இசைபட வாழ்தல் என்ற வள்ளுவர் வாக்குப்படி வாழ்க்கையை அமைத்துக்கொண்டுள்ளார் தாய்லாந்து தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தின் நிறுவனத் தலைவராக இருந்து, தமிழ்ப் பணியும் ஆற்றிவருகிறார்.

பின் அட்டைப்பட விளக்கம்

நூல்: வரலாறு படைத்தவர் வரலாறு

1988 பக் 146 ரு 18/-

ஆசிரியர் : ஜெ. எத்திராஜன்

வெளியீடு : குழந்தை இலக்கியக் கழகம் 72, கிருஷ்ணா நகர் சென்னை—600 091

அட்டைப்பட விளக்கம்: மேலே 'அன்பின் அலைகள் படத்துக்காக பூவண்ணனுக்கு முதல்வர் மாண்மிகு எம்.ஜி.ஆர். தங்கப்பதக்கம் அணிவித்துப் பாராட்டு கிறார் (1979).

கீழே: 'நம்ம குழந்தைகள்' படத்துக்காக பூவண்ண னுக்கு முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் பரிசும், பாராட்டிதழும் வழங்குகிறார் (1971)

டாக்டர் பூவண்ணன்

- டாக்டர் பூவண்ணன். சிறுவர் இலக்கிய உலகில் பிறர் பெறாத சிறப்பைப் பெற்றவர்.
- சிறுகதை, கவிதை, கட்டுரை, நாவல், நாடகம், வாழ்க்கை வரலாறு, சரித்திரம். இலக்கிய வரலாறு, மொழியியல், அறிவியல் முதலிய அனைத்துத் துறை களிலும் நூல்கள் எழுதியவர்.
- பத்திரிகை, புத்தகம், நாடக மேடை, பேச்சு மேடை, வானொலி, திரைப்படம் ஆகியவற்றிலும் ஈடுபட்டுப்புகழ் பெற்றவர்.
- சிறுகதை, கவிதை, நாவல், நாடகம், வாழ்க்கை வரலாறு, திரைப்படம் ஆகியவற்றுக்குப் பரிசு பெற்றவர்.
- தமிழ் வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு, சிறுவர் இலக்கிய வரலாறு ஆகிய வரலாறுகளைப் படைத்தவர்.
- வேறு எவரும் பெறாத இத்தனை சிறப்புகளும் பெற்று, சிறுவர் இலக்கிய உலகில் ஒரு புதிய வரலாறு படைத் தவர்.
- அவரது வரலாற்றை அவரது பள்ளித்தோழர் ஜெ. எத்தி ராஜன் எழுதியுள்ளார். இந்நூல் சிறுவர் இலக்கிய வரலாற்றில் நிலைத்த இடம் பெறுவது உறுதி

Cover Designed by P.N. Anandan

இல்லந்தோறும் நூலகம் அமைப்பீர்!

முத்தமிழ் கவிஞர்

டாக்டர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

நுண்ணறிவு தருகின்ற அழைப்பே இங்கு
நூலகத்தின் வரவேற்பு! நெஞ்சில் வார்க்கும்
வண்ணமெலாம் எதிர்கால ஓவியங்கள்;
வாழ்க்கைத்தேர் ஏறுகின்ற காவியங்கள்;
உண்மைகளைச் சுமக்கின்ற புத்தகங்கள்
உலமெனும் போர்க்களத்தின் படைக்கலங்கள்!
கண்மணிகள் மனிதனுக்குத் தேவை; நாட்டின்
கண்ணான நூலகமோ வீட்டில் தேவை!

தேனிருக்கும் நூலகமே, நாளும் உன்னைத்
தேடுகின்றோர் நெஞ்சமெலாம் மயங்கச் செய்வாய்!
வானகத்தை வளைக்கின்ற ஆர்வம் ஊட்டி
வையத்தில் புதுமைகளைப் படைக்கச் செய்வாய்!
மானிடத்தின் மாமருந்தே! எண்ணமென்னும்
மழைமேகம் தவழ்கின்ற குன்றே! துன்பக்
கானகத்தைக் கடக்கவல்ல துணையே! உன்னைக்
கைதொழுவோர் வாழ்க்கையிலே நடுக்க மில்லை!

எழில்விரிக்கும் சோலையிலே வண்டு பாடும்!
இலக்கியப்பூ நீவிரித்தால் நெஞ்சம் பாடும்!
விழிவிரிக்கும் பார்வையினால் காட்சி தோன்றும்
விளக்கொளிநீ விரிப்பதனால் உயர்வு தோன்றும்!
குழல்விரிக்கும் இசையினிலே உலகம் ஆடும்
குடைவிரிக்கும் புதுக்கருத்தால் உயிர்கள் ஆடும்!
நிழல்விரிக்கும் நெடுமரத்தில் கனிகள் தங்கும்
நீவிரிக்கும் நூற்களினால் புகழே தங்கும்!

குலைவாழை ஈட்டம்போல் நிற்கும் நூற்கள்
　　கூறுகின்ற நுண்கருத்தால் உலகம் வாழும்!
மலர்பூத்த தோட்டம்போல் மணக்கும் நூற்கள்
　　மாந்தரெனும் வண்டுகளைத் தேடி நிற்கும்!
அலையற்ற கடல்போல அமைதி காட்டி
　　அறிவுலக ஆழத்தை அளந்து காட்டும்
விலையற்ற செல்வாய்கள் வீடு தோறும்
　　விருந்தளிக்க நூலகத்தை ஆக்கு வீரே!

புத்தருடன் பேசுகின்ற வாய்ப்பும் மண்ணில்
　　புகழ்சுமந்து வீற்றிருக்கும் குறளின் பேச்சும்.
முத்தமிழாம் பொன்மயிலின் நாட்டியத்தை
　　முறுவலுடன் காணுகின்ற பேறும் நல்ல
வித்தகர்கள் விஞ்ஞான விளக்கி னாலே
　　வெண்ணிலவை அறிந்துகொள்ளும் திறமும் அன்பின்
தத்துவத்தை விரிக்கின்ற சிறப்பும் நன்கு
　　தருவதற்கு நூலகம்போல் பிறிதொன் றுண்டோ?

இமயத்தில் தொடங்கிவரும் கங்கை மீண்டும்
　　இமயத்தை அடைவதில்லை! முதுமையென்னும்
சுமையேறிக் கூன்முதுகாய் ஆன பின்னால்
　　துடிக்கின்ற இளம்பருவம் ஒருவ துண்டோ?
இமைமூடிப் போகுமுன்னால் கற்க வேண்டும்
　　இணையற்ற செல்வமன்றோ கல்விச் செல்வம்?
அமைகின்ற நூலகத்தால் இல்லந் தோறும்
　　அறிவுலகின் தலைவாயில் திறக்க வாரீர்!



The inveterate reader will read anything

in any position

திருக்குறள் நூலகம்

ஜி. கௌதம்

சென்னையில் அண்ணாநகர் விஸ்வேஸ்வரய்யா கோபுரம் அருகே ஓர் அமைதியானவீடு வாசலில் "குறளகம்" என்று பொறிக்கப்பட்டிருந்தது. வாசலை ஒட்டினாற்போல் ஒரு கரும்பலகை. அதில் அழகான எழுத்தில் ஒரு திருக்குறள். கீழே குறளுக்கான விளக்கமும் எளியதமிழில்! வீட்டுக்குள் நுழைந்தபோது 'கருணாகரன் நினைவுத் திருக்குறள் நூலகம்' வரவேற்றது. திரும்பிய பக்கமெல்லாம் திருக்குறள் வரிகள் பொறிக்கப்பட்டிருந்தன. ஆடியோ காஸெட்டில் சன்னமாய்த் திருக்குறள் ஒலித்துக் கொண்டிருந்தது பேராசிரியர் பாஸ்கரன் நிமிர்ந்து பார்த்து வரவேற்றார். 'திருக்குறள் பாஸ்கரன்' என்று அழைக்கப்படுபவர்!

''திருக்குறள் மட்டுமல்ல...

திருக்குறள் சம்பந்தப்பட்ட எல்லாப் புத்தகங்களையும் தேடிப் பிடித்துச் சேர்த்து வைத்திருக்கிறேன். திருக்குறள், குறள் திருவள்ளுவர். வள்ளுவர், விளக்கவுரைகள், ஆங்கில மொழிபெயர்ப்புகள், பிற மொழியில் வெளியானவை. திருக்குறளைத் தழுவிய கதைகள், கருத்துகள்... இப்படித் தனித்தனிப் பிரிவுகளின்கீழ்: புத்தகங்களை வகைப்படுத்தி வைத்திருக்கிறேன். பொதுமக்கள் யார் வேண்டுமானாலும் வந்து படித்துவிட்டுப் போகலாம்...'' என்றார் பாஸ்கரன் தன் சொந்தச் செலவில் நூல்களை வாங்கிக் குவித்து வைத்துள்ள இவர், நூலகத்துக்கு வருவதற்காக மக்களிடம் கட்டணம் எதுவும் வசூலிப்பதில்லை!

அறுபது பிளஸ் வயதாகும் பாஸ்கரன், தமிழகம் முழுவதும் பல்வேறு பள்ளி, கல்லூரிகளில் பணியாற்றியவர் திருநெல்வேலி, மதுரை திருச்சி பிராந்தியங்களுக்கான கல்லூரிக் கல்வித் துணை இயக்குநராகவும் பணியாற்றிச் சென்ற வருடம் பணியிலிருந்து ஓய்வு பெற்றிருக்கிறார், கல்லூரிக் கல்வித் துணை இயக்குநராகப் பணியாற்றிய காலத்தில் திருக்குறளைப் பரப்புவதில் இவர் காட்டிய தீவிரமும் பாராட்டக்கூடியது. திண்டுக்கல், திருநெல்வேலி, மதுரை, உத்தமபாளம் உட்பட ஐம்பதுக்கும் மேற்பட்ட பள்ளி. கல்லூரிகளின் வகுப்பறைச் சுவர்களில் திருக்குறளை எழுத வைத்திருக்கிறார். பணியாற்றிய ஊர்களிலெல்லாம் பாங்குகள், அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் இவற்றிலும்கூடத் திருக்குறள் பலகைகளைத் தொங்கவிட முயன்று வெற்றியும் பெற்றிருக்கிறார்! மாணவர்களுக்கு மட்டுமல்லாது, தனக்குக் கீழே பணிபுரிந்த ஊழியர்களுக்கும் திருக்குறள் தொடர்பான போட்டிகள் நடத்திப் பாராட்டியிருக்கிறார். பத்துப் பதினைந்து கல்லூரிகளுக்குத் தன் சொந்தச் செலவில் தலா 133 திருக்குறள் நூல்களை வழங்கித் 'திருக்குறள் நூலகம்' அமைத்துக்

கொடுத்திருக்கிறார்.
"இலக்கியத்துக்கு இலக்கணமாக இருப்பது திருக்குறள். காலத்தால் மாறாத கருத்துகளுடையது. மனிதனின் சிந்தை செம்மைப்படுவதற்குத் திருக்குறள் படிப்பதைத் தவிர வேறு சிறந்த வழி இல்லை எனலாம். சமூகத் தீமைகளச் இயன்ற அளவுக்கு நீக்குவதற்கும், நாளைய தமிழகத்தின் வளத்தை நெறிப்படுத்தவும். மக்களிடத்தில் ஒழுக்கத்தை வளர்க்கவும் திருக்குறள் கருத்துகளை அனைவருக்கும் பரப்ப வேண்டியது அவசியம்..." என்று கூறுகிறார் பாஸ்கரன்.

திருக்குறளின் மீது எப்படி இவ்வளவு ஆர்வம் ஏற்பட்டது இவருக்கு..?

"எனக்கு ஏழு வயது இருக்கும்போது என் அம்மா ஹம்சவேணி இறந்துபோனார். அப்போது நாங்கள் திருநெல்வேலியில் வசித்து வந்தோம். அம்மா வெறும் மூன்றாம் வகுப்புவரைதான் படித்தவர் ஆனாலும் திருக்குறளைப் படித்து மகிழ்வதில் மிகுந்த விருப்பம் கொண்டவர். என் அம்மா படித்து முடித்து வைத்திருந்த திருக்குறள் புத்தகங்கள்தான் எனக்குத் திருக்குறளார்வம் ஏற்படச் செய்தவை..." என்றார் பாஸ்கரன்

இவரது திருக்குறள் சாதனைகளில் இன்னொன்று... ஒரத்தநாடு விஸ்வநாதர் கோயில் சுற்றுச்சுவர்களில் 1,330 குறட்பாக்களும் தற்போது எழுதப்பட்டிருக்கின்றன! தனது வீட்டின் இரண்டாவது தளம் முழுவதையுமே திருக்குறள் நூலகமாக்கியிருக்கிறார் பாஸ்கரன். தனது விசிட்டிங் கார்டு முதல், தான் உபயோகிக்கும் ஒவ்வொரு பொருளிலும், எழுதும் கடிதங்களிலும் திருக்குறளைப் பரப்புகிறார் பாஸ்கரன்.

திருக்குறள் கருத்துகளைப் பரப்புவதற்காகப் பல்வேறு வழிகளிலும் பாடுபட்டு வரும் இவருக்கு இரண்டு பெரிய ஆதங்கங்களும் உண்டு!

"வள்ளுவர் கோட்டத்தைத் 'திருவள்ளுவர் கோட்டம்' என்றுதான் குறிப்பிட வேண்டும். 'திரு' என்பது மரியாதைக்குரிய அடைமொழி. அதைப்

பிரித்தெடுக்கக்கூடாது.
திருவள்ளுவர் பெயரில்
இதுவரை ஒரு
பல்கலைக்கழகம்
அமைக்காததும் எனக்கு
மிகவும் வருத்தமான ஒன்று...''
என்கிறார் பாஸ்கரன்
பாஸ்கரன் சிறுவயதிலிருந்தே
திருக்குறளின்பால் பற்றுதல்
கொண்டவராக இருந்தாலும்,
பணி ஓய்வுபெற்றதற்குப் பின்
திருக்குறள் வளர்ச்சிக்காக
இவர் காட்டும் ஆர்வம்
அதிகரித்திருக்கிறது. அதற்குப்
பின்னணிக் காரணமாக ஒரு
மெல்லிய சோகமும் உண்டு
தன் ஒரே மகனான
இன்ஜினீயர் கருணாகரனை
1991-இல் சாலை விபத்து
ஒன்றில் இழந்துவிட்டார்.
பாஸ்கரன். பாஸ்கரனுக்கும்
அவரைக் காதலித்து
மணந்தவரான மனைவி
ராஜேஸ்வரிக்கும் ஒரே
மகனது இழப்பு
பேரிடியாகி விட்டது.
'மகன் நினைவுகளை
மறப்பதற்காக' என்றில்லாமல்
'மகன் நினைவுகளை அடிக்கடி
சுவாசித்துக் கொள்ள,
அவனது ஆத்ம சாந்திக்காக...''
இப்படிப்பட்ட
காரணங்களுக்காகத்
திருக்குறள் பணிகளில்
ஈடுபட்டிருக்கிறார் பாஸ்கரன்!
''என் மகன் கருணாகரனுக்காக
மூன்றாவது மாடியில் பெரிய
நினைவகத்தைக் கட்டிக்
கொண்டிருக்கிறேன்...'' என்று
நெகிழ்ந்துபோய்க் கூறிய இந்த
அன்புத் தந்தை, சுவர்க்
கடிகாரம் 'மூன்று மணி'
என்றதும் சுறுசுறுப்பானார்.
''மன்னிச்சுக்குங்க...
இன்னிக்குச் சனிக்கிழமை
மூணு மணிக்குச்சின்னப்
பசங்கள்லாம் வருவாங்க.
அவங்களுக்குத் திருக்குறள்
வகுப்பு எடுக்கணும் நான்...''
என்றவாறே விடைபெற்றுக்
கொண்டு நூலகத்தின்
மையப்பகுதியில் இருந்த
ஹாலுக்குள் நுழைந்தார்.
அடுத்த சில விநாடிகளில்
சின்னக் குழந்தைகளுக்குத்
திருக்குறளைத் தெளிவாக
நடத்தும் ஆசிரியராக
மாறியிருந்தார் பாஸ்கரன்
திருக்குறள் வகுப்புகள்
எடுப்பதற்காகப்
பணமேதும்கூட
வாங்கியதில்லையாம் இவர்!

நன்றி ஜூனியர் போஸ்ட்

கருணாகரன் நினைவு திருக்குறள் நூலகம்
குறளகம், X 35, மூன்றாம் முதன்மை சாலை,
அண்ணாநகர், சென்னை - 600 040.
போன் : 6211150

சென்னைப் பொது நூலகச்சட்டம், 1948

அமரர் பேராசிரியர் திருமலை முத்துசாமி

2. மாவட்டக் கழகத்தினால் (District Board) தேர்ந்தெடுக்கப்படும் ஓர் உறுப்பினர். (ஒருமாவட்டத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டக் கழகங்கள் இருப்பின், ஒவ்வொரு கழகமும் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்து அனுப்பலாம்)

3, மாவட்ட த்திலுள்ள ஊராட்சி மன்றங்களின் தலைவர்கள் சேர்ந்து தேர்ந்தெடுக்கும் உறுப்பினர்கள். (ஒவ்வொரு தாலுகாவிலுமுள்ள ஊராட்சி மன்றங்களின் தலைவர்கள் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கலாம்.)

4. மாவட்டத்திலுள்ள நகராட்சி மன்றங்கள் தேர்ந்தெடுக்கும் உறுப்பினர்கள். அவை கீழ்க்கண்டப்படி மக்கள் தொகைக்கேற்ப உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கலாம்.

நகராட்சி மக்கள் தொகை	உறுப்பினர்
ஒரு இலட்சத்திற்குள்	1
இலட்சத்திற்குமேல் இரண்டு இலட்சத்திற்குள்	2
இரண்டு இலட்சத்திற்குமேல்	3

5. அரசினர் அவ்வப்போது குறிப்பிடும் ஒரு பதவியை வகிப்பவர், (இவர் நூலக ஆணைக் குழுவின் செயலாளராகவும் இருந்து வருவார்)

ஒவ்வொரு நூலக ஆணைக் குழுவும் தனது உறுப்பினர்களில் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும். நூலக ஆணைக் குழுவின் செயலாளராக இன்று இருப்பவர் மாவட்டக் கல்வி அதிகாரி ஆவார். (1970)

இக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப் பட்ட உறுப்பினரின் பதவிக் காலம் மூன்றாண்டுகளாகும். பதவிக் காலம் முடிவடையும் முன்பு ஓரிடம் காலியாகுமானால் அந்த இடத்திற்கு வேறொருவர் நியமிக்க அல்லது தேர்ந் தெடுக்கப்படுவார். அவர் எஞ்சியுள்ள காலத்திற்குப் பதவி வகிக்கலாம்.

ஓர் உறுப்பினர் தாம் வகிக்கும் பதவியின் நிமித்தம் உறுப் பினராக இருப்பாரானால் அவருடைய அப் பதவிக்காலம் முடிவடைந்தவுடன் அவருடைய உறுப்பினர் பதவியும் முடி வடைந்து விடுகிறது.

நூலக ஆணைக் குழு உறுப்பினர்கள் மறு தேர்தலுக்கு அல்லது மறு நியமனத்திற்குத் தகுதி யுடையவர்களா வார்கள்.

ஒவ்வொரு மாவட்ட நூலக ஆணைக் குழுவும் அந்த மாவட்டத்திற்குள் ஒரு கூட்டு நிறுவனமாக (Corporate Body) இயங்கிவரும்.

செயற்கூட்டுக்குழு—உட்குழு

ஒரு மாவட்ட நூலக ஆணைக் குழு செயற் குழு ஒன்றை நியமித்துக் கொள்ளலாம். இச் செயற்குழுவின் உறுப்பினர் களின் எண்ணுக்கை ஏழுக்கு மேற்போகாமல் இருக்கவேண்டும் இக் குழுவிடம் தனது அதிகாரங்கள் அல்லது கடமைகள் முழுவதையும் அல்லது ஒரு பகுதியையோ ஒப்படைக்கலாம்.

தான் விரும்பும் எந்த ஒரு காரியத்தைப் பற்றியாவது தனக்கு ஆலோசனை கூறவோ அல்லது ஆய்வு அறிக்கை அளிக் கவோ அவ்வப்போது உட்குழுக்களையும் மாவட்ட நூலக ஆணைக் குழு நியத்துக் கொள்ளலாம்.

நூலக ஆணைக்குழுவின் செயல் திட்டம்

நூலக ஆணைக் குழுக்கள் அமைக்கப்பட்டவுடன், கூடிய விரைவிலும், இயக்குநர் விரும்பும் சமயங்களிலும் மாவட்டங்

களில் நூலகங்களை நிறுவுவதற்கும், நூலகப் பணிகளைப் பெருக்குவதற்குமான திட்டம் ஒன்றை அவை வகுத்து அதனை இயக்குநரின் ஒப்புதலுக்கு அனுப்ப வேண்டும். இயக்குநர் இத் திட்டத்தில் தான் உசிதமெனக் கருதும் மாறுதல்களையும் திருத்தங்களையும் செய்து, அதனைச் செயல்படுத்துவதற்கு அனுமதி வழங்குவார். இத்தகைய மாறுதல்களையும் திருத்தங்களையும் செய்வதற்கு இயக்குநருக்கு அதிகாரம் உண்டு.

நூலக ஆணைக் குழுவின் அதிகாரங்கள்

நூலக ஆணைக் குழுவிற்குப் பின்வரும் அதிகாரங்கள் உண்டு:

1. பொதுநூலகங்களுக்குத் தகுதியான மனைகள், கட்டிடங்களுக்கு ஏற்பாடு செய்தல்; மேலும் நூலகங்களுக்குத் தேவையான மேசை, நாற்காலி, அலமாரி போன்ற தளவாடங்களையும் பிறவசதிகளையும் வழங்குதல்.

2. நூலகங்களுக்குத் தேவைப்படும் நூல்கள், பருவ வெளியீடுகள், நாளிதழ்கள், நாட்டுப் படங்கள், கலை விஞ்ஞானப் பொருள்கள், சிலைடுகள், திரைப்படச் சுருள்கள் மற்றும் இவை போன்ற வேறு சாதனங்களைச் சேகரித்து வைத்தல்.

2. நூலகங்களை நிருவகிப்பதற்குத் தேவைப்படும் ஊழியர்களை அவ்வப்போது நியமித்தல். (தொடரும்)

விந்தன் புத்தகங்கள் வரப் பெற்றோம்

1. பெரியார் அரிச்சுவடி, 1994, ரூ. ு.
2. விந்தன் கதைகள் 1985, பதி 2. ரூ. 15.
3. ஒரே உரிமை 1985. ரூ 14.
4. பசிகோவிந்தன் 1984 பதி 2. ரூ. 4.50
5. எம்.கே.டி. பாகவதர் கதை 1983 ரூ 12.
6. இதோ ஒரு மக்கள் பிரதிநிதி 1986. ரூ 12.
7. ஓ, மனிதா 1986, ரூ 12.
8. அன்பு அலறுகிறது 1986. ரூ 14.50

விந்தன் புதல்வர் கோ.சூரியமூர்த்தி...
புத்தகப் பூங்கா

23, தாந்தோணியம்மன் கோயில் எக்ஸ்டன்ஷன்
வில்லி வாக்கம் சென்னை — 600 049

என்னை வாசித்தப் புத்தகங்கள்

மாண்புமிகு டாக்டர்

ஜெயலலிதா, தமிழக முதல்வர்

'நான் ஒரு புத்தக பைத்தியம்' என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே! ஒரு நாள் ஏதோ ஒரு புத்தகத்தை வாங்குவதற்காக நான் மவுண்ட் ரோடிலுள்ள ஹிக்கின்பாதம்ஸுக்குப் போனேன் அங்கிருந்த எல்லாப் புத்தகங்களையுமே வாங்க வேண்டும் போலிருந்தது எனக்கு. 'மற்றவர்களுக்கும் கொஞ்சம் விட்டு வைப்போமே' என்று மனத்துக்குப் பிடித்த புத்தகங்களை மட்டும் வாங்கிக்கொண்டு 'பில்'லைப் பார்த்தால் 3,500 ரூபாய் என்று இருந்தது!

பெங்களூரில் நான் படித்ததெல்லாம் ஆங்கிலம். தமிழ் படிக்க அங்கே வாய்ப்பு இல்லை. சென்னை வந்ததும் ஓர் ஆசிரியரை வைத்துத் தமிழ் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டேன். தமிழ் மொழியின் மீது மற்றவர்களுக்குள்ள பற்று எனக்கும் உண்டு. தமிழில் வெளிவரும் அத்தனை பத்திரிகைகளையும் நான் தவறாமல் பார்க்கிறேன், படிக்கிறேன்.

நான் சிறியவளாக இருந்தபோது, 'இந்தப் புத்தகங்கள் பெரியவர்களுக்காக வாங்கப்பட்டவை. இதையெல்லாம் நீ படிக்கக்கூடாது' என்று பெரியவர்களாகப் பட்டவர்கள் சில புத்தகங்களை எடுத்து எனக்குத் தெரியாமல் மறைத்து வைத்து விடுவார்கள், நானோ அந்தப் புத்தகங்களைத் தேடி எடுத்துப் படித்துவிட்டு இருந்த இடத்திலே வைத்துவிடுவேன்!

இப்போது நான் கட்டி வரும் புதிய வீட்டில் நூலகத்துக்காக ஒரு தனி அறை அமைக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். அந்த அறையில் ஒரு நுலகத்தைக் கொஞ்சம் பெரிய அளவில் அமைத்து, என் நண்பர்கள் அங்கு வந்து படித்துவிட்டுப்போக வசதி செய்யவேண்டும் என்று எண்ணியுள்ளேன்,

ஆனால் ஒன்று— புத்தகங்களை மட்டும் 'இரவல்' கொடுக்க மாட்டேன். கொடுத்தால் எங்கே திரும்பி வருகிறது?

என்னைப் போலவே என் அண்ணனும் ஒரு புத்தகப்பித்து. என் குடும்ப டாக்டர் திரு பி. ஆர். கிருஷ்ணமூர்த்தியும் இந்த ரகத்தைச் சேர்ந்தவரே. எங்கள் டாக்டர் மட்டும் என்னிடம் புத்தகங்களை இரவலாக வாங்கிக் கொண்டு போவார். படித்துவிட்டு மறக்காமல் திருப்பித் தந்துவிடுவார்!

எனக்கு முன்னால் என் பாட்டனார் ரங்கச்சாரி பெரிய நூலகம்ஒன்றை எங்கள் வீட்டில் வைத்திருந்தார். அவர்இறந்த பிறகு அதிலிருந்த நூல்களையெல்லாம்பலர் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அவையெல்லாம் மிக நல்லநூல்கள், போனவை போனவையே; திரும்பியபாடில்லை இது எனக்கு ஒரு பெரிய குறை. நல்ல புடவையாயிருந்தாலும் சரி நல்ல நகையாயிருந்தாலும் சரி— நாளடைவில் அலுத்து விடுகிறது. நாளாக ஆக அவற்றின் மெருகும் மங்கி விடுகிறது. ஆனால் ஒரு நல்ல புத்தகமோ எத்தனை தடவை படித்தாலும் அலுப்பதில்லை, அது மட்டுமா? காலமெல்லாம் வாழ்ந்து கொண்டிருப்பவை நல்ல புத்தகங்களே அல்லவா?

--பேட்டி :பி.வி. கிரி

நன்றி: தினமணி கதிர் (புத்தக அலமாரி) 30-4-1971

வரப் பொற்றோம்

சுற்றுப்புறச் சூழலை நச்சுக் கழிவுகள் மட்டும்தானா பாதிக்கின்றன? புற்றீசல்களென வந்து கொண்டிருக்கும் பத்திரிகைகளின் நச்சுத்தன்மைகளும் உளவியல் ரீதியாக வாலிப வயதினரைப் பாதிக்கின்றன.

அவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்ட இதழாக இலக்கியக் குடும்பம் திகழ்கிறது. இதழின் உயரிய நோக்கம் இதழை விரித்தவுடனேயே கருத்தைக் கவருகின்றது அது—

''படிக்க வேண்டும்;
படைக்க வேண்டும்;
பண்பாட்டை
வளர்க்க வேண்டும்''

படைப்பிலக்கியங்களோடு கட்டுரைகள், கவிதைகள், திறனாய்வுகளோடு வெளிவரும் பண்பாட்டிதழ் இலக்கியக் குடும்பம்.

—மீராமகன்

இலக்கியக்குடும்பம் காலாண்டிதழ். விலை ரூ. 6, முகவரி, 85, திருவள்ளுவர் சாலை, சென்னை-600 018.

கடிதங்கள்

மூத்தபதிப்பாளர் ''கலைஞன்'' G. மாசிலாமணி சென்னை-17

முன்னமே நூலக இயக்கத்தில் பழுத்த அநுபவ ஞான முள்ள தாங்கள் நூலகம் இலக்கியம் இதழ் வெளியிடுவது, புத்தக உலகத்தையும் நூலக இயக்கத்தையும் நனி சிறக்கச் செய்யும். தங்கள் பணி தழைத்தோங்க பிராத்திக்கிறேன்.

தமிழரசி பதிப்பகம் யமுனா

பிரசுரம் பதிப்பாளர் : மு. செல்வராசன் சென்னை-17

...நூலகம் இலக்கியம் ஓர்கலங்கரை விளக்கம் தங்கள்பணி இலக்கிய உலகிற்கு ஓர் புதிய உத்வேகத்தை அளிக்கட்டும், தமிழ் கூறும் நல்லுலகிற்கு விடியலை அளிக்க வந்த நூலகம் இலக்கியம் ஆல்போல் தழைத்துச் சிறக்க என் பிராத்தனை கள்.

பேராசிரியர் சபாநாயகம் விருத்தாலம்—1

நூலகம் இலக்கியம் சரித்திரம் படைக்கட்டும்.

பெரியவர் முல்லை முத்தையா சென்னை—40

அச்சு அமைப்பில் கவனம் செலுத்த வேண்டும்

திருவண்ணாமலை, நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் 5ம் வகுப்பு முதல் S.S.L.C. (1953)வரை, ஒரே பெஞ்சில் பக்கத்து பக்கத்து இருக்கையில் அமர்ந்து படித்த பால்ய நண்பர் பெருமாள், பெரிய படிப்பு படித்து நூலகம் ஆசிரியராகி பயனுள்ள தகவல்களை அளித்து வருவது கண்டு மகிழ்கிறேன் நானே ஆசிரியரானது போல் பூரிக்கிறேன்.

தாம்பரம்—A. கண்ணன், துறைமுகப் பொறுப்புக் கழகம், அதிகாரி (ஓய்வு)

N. ராஜா முகமது M.A., M,L,I.S,. நூலகர்,
புதுக்கல்லூரி சென்னை—14.

பதிப்புச் செம்மல் தமிழவேள் பயிலும் நாள் தொட்டு எந்த நூல் வந்தாலும் உடனே வாங்கி, படித்துக்கோடிட்டு வைத்திடுவார். இரண்டு படிகள் வாங்கிப் படிக்கும் ஆர்வத் திற்கே, இவருக்கு இன்னமொரு டாக்டர் பட்டம் தரலாம்.

திருக்குறள் நூலகம் திருக்குறள் பாஸ்கரன் சென்னை—40

Catalogue Cabinet-ஐ நூல் பட்டியல் பெட்டகம்,(அ) நூல் பட்டியல் பேழை எனலாம் என்கிறார்.

டாக்டர் பூவண்ணன் 7-11-95 கோவை-11 புரவலர், சந்தாதரர் பட்டியை புகைப்படத்துடன் வெளியிடலாமே சங்கப் பலகையும், அரசு பொது நூலகத் துறையும் கைகொடுத்தால் காலூன்றலாம். off-set-இல் பிரசுரிக்கலாம்.



சங்கப் பலகைத் திட்டம்:
மூப்பனார் துவக்கி வைத்தார்

தமிழ்ப் புத்தகங்களை மக்களிடம் பரவலாக எடுத்துச் சென்று விற்பனை செய்ய ஏற்படுத்தப்பட்டுள்ள, சங்கப் பலகை திட்டத்தை' காங்கிரஸ் மூத்த தலைவர் ஜி.கே. மூப்பனார் செவ்வாய்க்கிழமை சென்னையில் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்.

சென்னை, அடையாறு காந்தி மண்டபத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. இந்திராகாந்தி எழுதிய ஆங்கில நூலின் தமிழாக்கமான 'மலரும் நினைவுகள்' என்ற நூலை மூப்பனார் வெளியிட, அதன் முதல் பிரதியை பழம் பெரும் எழுத்தாளர் சி.சு. செல்லப்பா பெற்றுக் கொண்டார்.

மக்களிடம் புத்தகங்களைப் படிக்க வைக்கும் பழக்கத்தை வளர்க்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இத்திட்டத்துக்கு துணை நிற்பதாகக் குறிப்பிட்டார் மூப்பனார்.

'எழுத்தை மட்டுமே நம்பி வாழும் எழுத்தாளர்கள் காலங் காலமாக கஷ்டப்படும் நிலை உள்ளது. 60 ஆண்டு காலமாக எழுத்தை மட்டுமே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறேன் புத்தகங்கள் விற்பனைக்காக சங்கப் பலகை மேற்கொள்ளும் முயற்சி பாராட்டத்தக்கது' என்றார் சி சு செல்லப்பா

இந்திராகாந்தி எழுதிய நூலை தமிழில் மொழி பெயர்த்த புதுவை மத்தியப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் வேங்கட சுப்பிரமணியன் பேசும்போது, நூலகங்களின் அவசியத்தை வலியுறுத்தினார்.

வீட்டுக்கு ஒரு நூலகம் அமைக்கவேண்டும் என்றார் எம். எஸ். உதயமூர்த்தி.

புத்தக விற்பனைத் திட்டத்தின் கீழ் முதல் புத்தகத்தை சென்னைத் தொலைக்காட்சி இயக்குநர் ஏ. நடராஜன் பெற்றுக் கொண்டார். மாதம் ஆயிரம் ரூபாய்க்கு புத்தகங்கள் வாங்கும் 'தமிழ் முன்னோடிகள்' திட்டத்தை ஆர்க்காடு இளவரசர் முகமது அப்துல் அலியும் தமிழ்ப் புத்தகக் கூப்பன் அன்பளிப்புத் திட்டத்தை இந்தியன் வங்கி பொது மேலாளர் அருணாசலமும் துவக்கி வைத்தனர்.

வா.மு. சேதுராமன், பத்திரிகையாளர் மாலன், கவிஞர் நா. காமராசன், என் வி. அருணாசலம், டி. கலசலிங்கம், ஆர். முத்துக்குமாரசாமி உள்ளிட்ட பலர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். சங்கப் பலகை இயக்கத்தின் நிர்வாக இயக்குநர் அப்பாஸ் இப்ராகிம் வரவேற்றார். அமைப்பின் புரவலர் மணலி எஸ். ராமகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

அமரர் பேரறிஞர் அண்ணாவின் நூல்களை தமிழக அரசு நாட்டுடமையாக்கியது. அதற்கு ஈட்டுத் தொகையாக, அறிஞர்கள் குழுவின் பரிந்துரையின்படி, ரூ 75 லட்சத்திற்கான காசோலையை, ராணி அண்ணாதுரையிடம் அவரது இல்லத்தில் முதல்வர் டாக்டர் ஜெயலலிதா, 1995, நவம்பரில் (2-11-95) வழங்கினார்.

அமரர் மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கலியாண சுந்தரத்தின் படைப்புகள் நாட்டுடமையாக்கப் பட்டதற்காக, அவரது மனைவி கௌரி அம்மாளிடம் ரூ 10 லட்சத்திற்கான காசோலையை தமிழக முதல்வர் டாக்டர் ஜெயலலிதா 3-11-1995 வெள்ளிக்கிழமை வழங்கினார்.

சிறந்த இலக்கிய வாதிக்கான 1995-ஆம் ஆண்டு அன்னை ராஜலட்சுமி விருதை, எழுத்தாளர் அனுராதா ரமணன் பெற்றார் 7-11-1995 அண்ணா கலையரங்கில் செவ்வாய்க் கிழமை சூப்பர் நடிகர் கமல்ஹாசன், அவர் நற்பணி இயக்கம் சார்பில் நடந்த விழாவில் இப்பரிசு வழங்கப்பட்டது. கவியரசு வைரமுத்து வாழ்த்துரை வழங்கினார்.

தேவகோட்டை சேவுகன் அண்ணாமலை கல்லூரி வெள்ளி விழா நடந்தது அழகப்பா பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர் இராமசாமி தலைமை தாங்கினார். விழாவில் வானதி திருநாவுக்கரசுக்கு பதிப்பு வேந்தர் என்ற விருது வழங்கப்பட்டது. திருநாவுக்கரசு தம்பதிகள் பொன்னாடை போர்த்தி சிறப்பிக்கப்பட்டார்கள்.

கேளுங்கள்

ஆங்கரை பைரவி இலால் குடி

? நீங்கள் வாசித்துக் கொண்டே இருக்க விரும்பும் புத்தகம் எது ?

! அவள்

சூப்பர் நியூஸ் 4-11-95

சென்னைப் பல்கலைக்கழக துணை வேந்தருக்கு வேண்டுகோள்

☐ 1950-களில் சாரதா ரங்கநாதன் பேராசிரியர் பதவிக்கு லட்ச ரூபாய் கொடை தந்தார் நூலகத்தந்தை டாக்டர் சீர்காழி ராமமிருத ரங்கநாதன் என்ற தஞ்சைத் தமிழர்

☐ 1995-இல் வேண்டுகிறோம்—தமிழ் நூலகக் கல்வி ஆராய்ச்சிக்கு இப்பதவியை-கொடையை பயன்படுத்த வேண்டுகிறோம்.

☐ நூலக இலக்கியம் வளர்க்க, நூலகக் கல்வியை எல்லா மட்டத்திலும் போதிக்க இக் கொடைப் பேராசிரியர் பதவியை பயன்படுத்தி உதவிட வேண்டும்.

☐ 1995-க்கு முன்... பழைய கதையை, கிளறிப் பேசப் போவதில்லை.

☐ MULISA, சந்தோஷப்படும் (சென்னைப் பல் கலைக் கழக 'நூலக தகவல் அறிவியல் மாணவர்கள் சங்கம்)

☐ நூலகக்கல்வி பயிலும்மாணவர்கள் மகிழ்வார்கள்

☐ முதலில் கோலன் பகுப்பு முறையை தமிழிலும் வெளியிடலாம்...

☐ நூலகக்கல்வித்துறை நூலகம், கோலன் பகுப்பு முறையை பயன்படுத்தினால் எஸ். ஆர். ஆர். ஆசிர்வதிப்பார்.

☐ அப்போதைக்கு, இப்போதே சொல்லி வைத்து வேண்டிக்கொண்டு விட்டோம். ரங்கநாதன் நாமம் வாழ்க! ☐

Edited. printed and published by NOOLAGAGNANI Dr. Pa. PERUMAL M. A., M. Lib. Sc, Ph. D.; from 6, Mu. Va. Street, Arumbakkam, MADRAS — 600 106. Phone No. 484 5034. Printer P. AYYASAMY at Thirumalai Deivam Art Printers 14, Yadaval Street, Aminjikarai, MADRAS—600 029.

GAJENDRA®

GAJENDRA ENTERPRISES

209/6, LINGHI CHETTY STREET, MADRAS - 600 001.
PHONE : OFFI : 5224450, 518105 RESI : 420851

அட்டை அச்சிட்டோர் :

மெட்ரோ பிரிண்டர்ஸ் & பேக்கேஜிங் இண்டஸ்டிரி, சென்னை-29 ☎ 420345

NOOLAGAM} ILAKKIYAM - Tamil Monthly November, 1995
Regd No. TN / MS (N) / 922 R.Dis 4441 / 95.E.

சிறுவர்கள் அனைவரும் படிக்க வேண்டிய நூலின் அட்டைப் படம்